பக்கங்கள்:-23

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மார்கழி 16 | வெள்ளிக்கிழமை | 02.01.2026 | அதிர்வு 155

## கொழும்பில் நேற்று இரவு ஒருவர் சுட்டுப் படுகொலை



கொழும்பில் புத்தாண்டு தினத்தில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கடுவலை – கொரதொட்ட பகுதியில் 06

# தமிழினம் விடுதலை பெற ஒன்றாகப் பயணிப்போம்!

## புத்தாண்டில் சி.வி.கே. அறைகூவல்

(எஸ். நிதர்ஷன்)

பிறந்துள்ள புத்தாண்டில் தமிழினம் விடுதலை பெற அனைத்து தரப்பினரும் ஒன்றாகப் பயணிக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் வலியுறுத்தினார்.

புத்தாண்டில் 'முரசு'க்கு நேற்று கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். 06




# இரண்டு பெண்கள் உட்பட மூவர் கத்தியால் குத்திப் படுகொலை!

## மாவனெல்லவில் புத்தாண்டு தினத்தில் சோகம்




கேகாலை, மாவனெல்ல பொலிஸ் பிரிவின் கொண்டேனிய பகுதியில் நேற்று இடம்பெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தத் தாக்குதலில் 4 பேர் ஆரம்பத்தில் மாவனெல்ல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். அவர்களில் இரண்டு பெண்கள் மற்றும் ஒரு ஆண் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இறந்தவர்கள் 52, 57 மற்றும் 66 வயதுடைய கொண்டேனிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

தாக்குதலின் போது காயமடைந்த 35 வயதுடைய பெண் 06




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறிதரன் குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிடுகையில், 'பட்ட காலிலே படும். கெட்ட குடியே கெடும்' என்று குறிப்பிட்டிருந்தேன். அந்தக் கூற்று சரி போலத்தான் தெரிகிறது.

ஏற்கனவே அரசமைப்பு கவுன்ஸில் உறுப்பினராக இருந்து கொண்டு, உயர் சிவில் பதவிகளுக்கு இராணுவத்தினரை நியமிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு அவர் உதவி புரிந்து வருகிறார் என்ற குற்றச்சாட்டு அவருக்கு எதிராக தீவிரம் கொண்டிருக்கும் இச்சமயத்தில், அதே வகையில் இன்னொரு விவகாரம் குறித்து இப்போது செய்திகள் வெளியாகி உள்ளன.

கடந்த மாதம் மூன்றாம் திகதி நடைபெற்ற அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டத்திலேயே இத்தகைய நியமனம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது.

சுயாதீன பொலிஸ் ஆணைக் குழுவுக்கு ஓர் ஆணையாளராக வடக்கிலும், கிழக்கிலும் 06

# பௌத்த சின்னங்கள் பரப்பப்படுகின்றமை வரலாற்று அடிப்படையேயற்ற நடவடிக்கை

## தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் விசனம்












**(கி.வசந்தன்)**

மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய உரிமை கோரல்களும், தமிழ் பிராந்தியங்களில் சிங்கள, பௌத்த சின்னங்கள் பரப்பப்படுவதும் வரலாற்று அடிப்படையே அற்றவை என்று தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.

புதுவருட தினமான நேற்று வவுனியாவில் அவர்களால் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள் –

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் பிள்ளைகளின் தாய்மார்களாகிய நாங்கள், வவுனியாவில் 3,237 அவது நாள்களுக்கும் மேலாகத் தொடர்ச்சியாக சுழற்சி முறை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்கிறோம். இந்தத் தியாகம் மற்றும் மனவுறுதி நிறைந்த இடத்திலிருந்து, காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளைப் பற்றிய உண்மையை வெளிக்கொணர உதவுமாறும், தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடரும் இனப்படுகொலையை நிறுத்தி இறைமையை மீட்டெடுக்க ஆதரவளிக்குமாறும் அமெரிக்காவையும் ஐரோப்பிய ஒன்றியத்தையும் தொடர்ந்து கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் அரசியல்வாதிகளாக அல்லர், மாறாக உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறலைக் கோரும் தாய்மார்களாகவே இந்தத் தார்மீக அடிப்படையில் பேசுகிறோம். தமிழ் வரலாறு காலனித்துவத்திற்குப் பிந்தைய அரசமைப்புகளுடனோ அல்லது திணிக்கப்பட்ட அரசியல் கட்டமைப்புக்களுடனோ தொடங்கவில்லை. நவீன எல்லைகளுக்கு மிக நீண்ட காலத்திற்கு முன்பே, இந்தத் தீவு தமிழ் பேசும் மக்களால் வசித்து ஆளப்பட்ட தமிழகத்தின் ஒரு பகுதியாக இருந்த பண்டைய காலங்கள் வரை அது நீண்டு செல்கிறது.

இந்தத் தீவில் தமிழர்களின் இருப்பு, பிற்கால அனைத்து அரசியல் மற்றும் இனக் கட்டுமானங்களுக்கும் முந்தையது. ஆயினும் கூட, சமகால தமிழ்த் தலைவர்கள் பலர் இந்த யதார்த்தத்தைப் புறக்கணித்து, அதற்குப் பதிலாக தனிப்பட்ட வசதி, வெளி அழுத்தங்கள் அல்லது மேட்டுக்குடி நலன்களில் வேரூன்றிய அரசியல் சூத்திரங்களை ஊக்குவிக்கின்றனர்.

கடந்த மாதம், அமெரிக்கா யாழ்ப்பாண விமான நிலையத்தில் இரண்டு முறை பெரிய இராணுவ விமானங்களைத் தரையிறக்கி மனிதாபிமான உதவிகளை வழங்குவதன் மூலம் தமிழ் பொது மக்களின் மீது உறுதியான அக்கறையை வெளிப்படுத்தியது. இருப்பினும், எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியோ அல்லது "சிவில் சமூக அமைப்பு" என்று சொல்லிக் கொள்ளும் அமைப்போ இந்த ஆதரவை பகிரங்கமாக அங்கீகரிக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரின் தாய்மார்கள் ஆகிய நாங்கள் மட்டுமே நன்றியைத் தெரிவித்தோம். இது தமிழர் மத்தியில் உள்ள தார்மீக மற்றும் தலைமைத்துவத் தோல்வியை அம்பலப்படுத்தியது.

தென்னிந்தியா மற்றும் தமிழ்த் தீவான இலங்கையை உள்ளடக்கிய தமிழகத்தில் ஒரு பழங்கால சிங்கள இனம் இருந்ததற்கான வரலாற்று அல்லது தொல்பொருள் சான்றுகள் எதுவும் இல்லை. தமிழ் இனம் சைவ சமயத்தைப் பின்பற்றியது. அதைத் தொடர்ந்து தமிழ் பௌத்தத்தைப் பின்பற்றியது. பின்னர் மீண்டும் சைவ சமயத்திற்கே திரும்பியது. இந்த மாற்றங்கள் மணிமேகலை உட்பட தமிழ் இலக்கியங்களில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய உரிமை கோரல்களும், தமிழ் பிராந்தியங்களில் சிங்கள பௌத்த சின்னங்கள் பரப்பப்படுவதும் வரலாற்று அடிப்படை அற்றவை.

சிங்கள மக்கள் தெற்கில் சுதந்திரமாக வாழலாம். ஆனால் வடக்கு–கிழக்கு வரலாறு, கலாசாரம் மற்றும் தொடர்ச்சியான இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அது தமிழ் தேசத்திற்கு சொந்தமானது.– எனத் தெரிவித்தனர்.

இதேவேளை, ஆர்ப்பாட்டத்தின் போது அவர்கள் அமரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை ஏந்தி இருந்தமையுடன், காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளின் படங்களையும் தாங்கி இருந்தனர்.

# வடக்கில் 25 வீதிகளின் திருத்தப் பணிகள் வருடப் பிறப்பின் முதல் தினத்தில் ஆரம்பம்

## மாணவர்களுக்கு பண வவுச்சர்களும் வங்கியில் வைப்பு; ஜெகதீஸ்வரன் எம்.பி. தகவல்

**(கி.வசந்தன்)**

வடக்கில் 25 வீதிகளுக்கான திருத்தப் பணிகள் வருட முதல் நாளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மாணவர்களுக்கான பண வவுச்சர்களும் வங்கியில் வைப்புச் செய்யப்படவுள்ளன என தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் வவுனியா அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ், மன்னார், வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் வீதி அபிவிருத்திப் பணிகள் தை முதலாம் நாள் ஆரம்பிக்கப்படுகின்றன. 2026 ஆம் ஆண்டு அபிவிருத்தி ஆண்டாக இருக்கும். யாழ் மாவட்டத்தில் 5 வீதிகளும், மன்னார் மாவட்டத்தில் ஆறு வீதிகளும், வவுனியா மாவட்டத்தில் எட்டு வீதிகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆறு வீதிகளும் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படுகின்றன.

இந்த ஆண்டு முழுவதுமே ஓர் அபிவிருத்திக்குரிய ஆண்டாக இருக்கும் என்பதில் எந்தவித ஐயமில்லை. அந்த வகையில் பல்வேறுபட்ட செயற்திட்டங்களை அரசாங்கம் இந்த ஆண்டிலே முன்னெடுக்க இருக்கின்றது. விசேடமாக வறுமை ஒழிப்பு செயற்திட்டத்தின் பிரதான பிரஜாசக்தி செயற்திட்டம் இன்றைய தினத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்பட இருக்கின்றது. அந்த வகையிலே அனைத்து மாவட்டங்களிலும் பிரஜாசக்தி



குழுமத்தின் தலைவர்கள் உட்பட நிர்வாக குழுவினர் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். இந்த பிரஜாசக்தி குழுவின் ஊடாக கிராம மட்டங்களில் மக்களுக்குரிய தேவைப்பாடுகள், பிரச்சுனைகள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமைப்படுத்தல்களின் அடிப்படையில் அவர்களுடைய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் காணப்பட இருக்கின்றன.

இதேபோல் பல்வேறுபட்ட செயற்திட்டங்கள் 2026 ஆம் ஆண்டில் நமது மக்களினுடைய வாழ்க்கையை சிறப்பான வகையில் மேல் எழச் செய்வதற்கும், அழகான ஒரு நாட்டை உருவாக்குவதற்கும் முன்னெடுக்கப்படுகின்றன. அதனால் இந்த ஆண்டு சிறப்பாக அமையும்.

கடந்த வருடத்தில் அபிவிருத்திகளில் சிறு பின்னடைவு ஏற்பட்டிருந்தது. டித்வா புயலினால் அழிவுகள் ஏற்பட்டன. இருப்பினும் எங்களுடைய அரசாங்கம் அதனை சரியான முறையில் கையாண்டு அந்த அழிவுகளிலிருந்து மக்களை மீட்டெடுப்பதோடு சுபீட்சமான ஒரு எதிர்காலத்தை 2026 இல் அவர்களுக்கு வழங்குவதற்கு காத்திருக்கின்றோம்.

பாடசாலை மாணவர்களுக்கான 6,000 ரூபா வவுச்சருக்குரிய கொடுப்பனவுகள் இன்றைய தினம் மாணவர்களுக்கு வைப்பில் இடப்பட இருக்கின்றன. பாடசாலைகள் ஆரம்பிக்கின்ற பொழுது அந்த மாணவர்கள் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் பாடசாலைக்கு செல்வதற்குரிய ஒழுங்குகளை அரசாங்கம் செய்திருக்கின்றது. புதிய கல்விச் சீர்திருத்தம் இந்த ஆண்டில் நடைமுறைக்கு வருகின்றது. தரம் ஒன்று மற்றும் தரம் ஆறு வகுப்புகள் வருகின்ற முதலாம் தவணையிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு, அந்த வகுப்புகளுக்குத் தேவையான அனைத்து விதமான வசதிகளும் அரசாங்கத்தினால் செய்து கொடுக்கப்பட இருக்கின்றன. 2025 ஆம் ஆண்டினைப் பொறுத்த வரையில் எங்களுடைய அரசாங்கத்திற்கு ஒரு வெற்றியான ஆண்டாக இருக்கின்றது.

அந்த வகையிலே முக்கியமாக கொழும்பு மாநகர சபையினுடைய முதலாவது வரவு – செலவுத் திட்டம் சவால்களுக்கு மத்தியில் வெற்றி பெறச் செய்திருக்கின்றோம். எங்களைப் பொறுத்த வரையில் நியாயமான, நீதியான, பாரபட்சம் இல்லாத ஓர் அரசாங்கம் என்ற வகையில் அதற்கு எதிர்த்து வாக்களித்தவர்கள் மனம்மாறி எங்களுக்கு சாதகமாக வாக்களித்து நாங்கள் வெற்றி பெற்றிருக்கின்றோம்.

இவ்வகையில்வரஇருக்கின்றஆண்டு ஒரு வெற்றியான ஆண்டாக இருக்கும் என்று நம்புகின்றேன். வர இருக்கின்ற இந்த ஆண்டுஅனைவருக்கும் ஒரு மகிழ்ச்சியான ஆண்டாக அமைய வாழ்த்துகின்றேன். – எனத் தெரிவித்தார்.

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் – 13, புன்னாலை வீதி, 477 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் மரைக்கார் தம்பி பெண் செய்நம்பு நாசிசியார் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை அப்துல் காதர், மொகமட் அப்துல் காதர் உம் பெண் சுல்தான் மொகிதீன் நாச்சியாவும் (1 பரப்பு 10.5 குளி), மீரான் மொகிதீன் மரிக்கார் தம்பியும் பெண் செய்நம்பு நாச்சியாவும் (1 பரப்பு 10.5 குளி), 26.02.1947 திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சுல்தான் மொகிடீன் மொகமட் அபூபக்கர் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5371ம் இலக்க பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடல் செய்துள்ளனர்.

குறித்த ஆதனத்தை ஹமிதா ஜமீல், மொகமட் ஜமீல் மொகமட் ஜபீர், எம்.ஜே.எம் ஜசீம், எம்.ஜே. சிம்லா பேகம், எம். ஜே. சம்சியா பேகம், எம் தாகிர் றொஜனி, சுல்தான் அப்துல்காதர் பாத்திமா பர்ஜனா, எஸ். ஏ.சி.சிராஜ்ன் முனீர் 03.11.2022ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எம் ரமீஸ் முகதாவில் 4879ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் குசைன் சலீம் மொகமட் அஸ்மி என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை குசைன் சலீம் மொகமட் அஸ்மி மற்றும் சுல்தான் அப்துல்காதர் சஹ்னஸ் ஆயிஷா 10.02.2025ம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம்.எம். எம். ரமீஸ் முகதாவில் 5349ம் இலக்க அறுதி உறுதி மூலம் தர்சிகா பஸ்லீம் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை, யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/82 ம் இலக்க கிராம அலுவலர் பிரிவில் 'பரந்தன் புளியடி' நிலப்பரப்பு 01 குளி 10.80 (நிலப்பரப்பு ஒன்று குளி பத்து தசம் எட்டு சைபர்) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி. தங்கராஜா அவர்களால் 08.08.2020ம் திகதி அளந்து வரையப்பட்ட 11469 ம் இலக்க படத்தின்படி துண்டு 01 எனச்சுட்டிய ஆதனம்.

இதற்கெல்லைகள்:–

வடக்கு: அப்துல் காதர் மொகமட் ஜலீல் இன் ஆதனம்.

கிழக்கு: மானிப்பாய் வீதி.

மேற்கு: செல்லம்மா ஆறுமுகத்தின் ஆதனம்.

தெற்கு: அப்துல் காதர் பாரூக்கின் ஆதனம்.

இதடங்கலும்.

தற்போது இவ்வாதனத்தை தர்சிகா பஸ்லீம் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது தர்சிகா பஸ்லீம் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**முதல்வர், யாழ் மாநகரசபை.**

# தீவக முன்னேற்றக் கழக ஏற்பாட்டில் வேலணையில் மகேஸ்வரனின் 18ஆவது நினைவு நாள் அனுஷ்டிப்பு

முன்னாள் அமைச்சர் தியாகராச மகேஸ்வரனின் 18 ஆவது வருட நினை வேந்தல் நாள் தீவக முன்னேற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் வேலணை மண்கும்பானில் நேற்று அனுச்க்டிக் கப்பட்டது.

அவரது நினைவாக ஒருதொகுதி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

இலங்கையின் முன்னாள் அமைச்சர் தியாகராஜா மகேஸ்வரனின் 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றாகும்.

தீவக முன்னேற்றக் கழகத்தின் தலை வர் சுவாமிநாதன் பிரகலாதன் தலை மையில் இந்த நினைவுகூரல் நிகழ்வு நேற்று மாலை 3.30 மணியளவில் வேலணை மண்கும்பானில் உள்ள தீவக முன்னேற்றக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது அமரர் மகேஸ்வர னின் திருவுருவப் படத்துக்கு சுடரேற்றி மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அமரர் மகேஸ்வரன் 2008 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று கொழும்பு கொட்டாஞ்சேனையில் உள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத் தில் வைத்து ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

1966 ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி யாழ்ப்பாணம் காரைநகரில் பிறந்த இவர் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். இந்து கலாசார அமைச்சராகவும் இருந்து மக்களுக்கான தனது பணியை முன்னெடுத்திருந்தார்.

அமரர் மகேஸ்வரனின் ஞாபகார்த்த மாக பாடசாலை மாணவர்களின் கல் வியை ஊக்குவிப்பதற்காக பாடசாலைக் கான கற்றல் உபகரணங்கள் அடங்கிய பொதிக தீவக முன்னேற்றக் கழகத் தலை வர் சுவாமிநாதன் பிரகலாதனினால் வழங்கிவைக்கப்பட்டது.

இதன் மூலம் முப்பது மாணவர்கள் தமது 2026 ஆம் ஆண்டுக்கான கல் வியை தடைகளின்றி முன்னெடுக்கும் வகையில் பயன் பெற்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

நல்லூர் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் குகானந்தன் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள், மாண வர்கள், பெற்றோர் எனப் பலர் இந்த நினைவேந்தலில் கலந்துகொண்ட னர்.










# சந்திரசேகரனின் 16ஆவது நினைவு தினம் தலவாக்கலை நகரில் நேற்று அனுஷ்டிப்பு





**(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)**

முன்னாள் அமைச்சர் அமரர் பெ.சந்திரசேகரனின் 16 ஆவது நினைவு தினம் அண்ணா சந்திரசேகரன் தொழிலாளர் முன்னணியின் செயலாளர் நாயகமும் சந்திரசேகரனின் புதல்வியுமான அனுஷா சந்திரசேகரன் தலைமையில் நேற்று தலவாக்கலையில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த அனுஷ்டிப்பு நிகழ்வை முன்னிட்டு தலவாக்கலை ட்ரூப் தோட்டத்தில் ட்ரூப் விநாயகர் ஆலயத்துக்கான இராஜகோபுர புனருத்தான பணிகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டதுடன் அமரர் சந்திரசேகரனின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் ஏராளமான கட்சித் தொண்டர்கள் மற்றும் தலவாக்கலை ட்ரூப் பிரதேச மக்களும் கலந்து கொண்டனர்.

# ஹட்டன் நகரில் மலையக மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் சந்திரசேகரனின் நினைவேந்தல்













**(பொகவந்தலாவ நிருபர்: எஸ்.சதீஸ்)**

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவர் அமரர் பெ.சந்திரசேகரனின் 16 ஆவது ஆண்டு சிரார்த்த தினம் நேற்று ஹட்டனில் உள்ள மலையக மக்கள் முன்னணியின் காரியாலயம் அனுஷ்டிக்கப்பட்டது.

இதில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமிஇராதாகிருஷ்ணன்,முன்னணியின் பொதுச்செயலாளர் விஜேயந்திரன், விரிவுரையாளர் கலாநிதி சந்திரபோஸ் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது அமரர் பெ.சந்திரசேகரனின் உருவ படத்திற்கு மாலை அணிவித்து, மெழுகு வர்த்தி ஏற்றி நினைவேந்தல் செய்யப்பட்டது. அண்மையில் ஏற்பட்ட டித்வா சூறாவளியில் பாதிக்கப்பட்டு உயிரிழந்தவர்களுக்கும் இதன் போது ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படைத்தளபதியாக செயற்பட்ட இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இவர் நியமனம் செய்யப்பட்ட இந்தக் கூட்டத்திலும் சிறிதரன் எம்.பி. இணைய வழியில் முழுமையாகப் பங்கு கொண்டிருந்தார் எனக் கூட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரை பொலிஸ் ஆணை குழுவுக்கு ஓர் உறுப்பினராக அரசுத் தரப்புப் பரிந்துரைத்த போது, அதனை அரசமைப்புக் கவுன்ஸிலில் அதன் சிவில் பிரதிநிதிகள் மட்டும் ஆட்சேபித்திருக்கின்றனர். பொலிஸ் நிர்வாகம் என்றாலும், அது சிவில் நிர்வாகம் தொடர்புபட்டது, அதை கட்டியாளும் ஆணைக் குழுவை இராணுவ மயப்படுத்த வேண்டாம் என்று தமது எதிர்ப்பை கவுன்ஸிலின் சிவில் பிரதிநிதிகள் தரப்பு பதிவு செய்திருக்கின்றது எனக் கூட்ட அறிக்கை தெரிவிக்கின்றது. ஆனால் அரசு தரப்பிலோ அல்லது சிறிதரன் உட்பட எதிர்க்கட்சியிலோ தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் வாக்கெடுப்பு கோராத காரணத்தினால் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாராய்ச்சி தேர்வு செய்யப்பட்டிருக்கிறார் என கூட்ட அறிக்கை விவரிக்கின்றது.

ஆக, இந்த ஆணை குழுவுக்கும் முன்னாள் பிராந்திய இராணுவத் தளபதியான மேஜர் ஜெனரல் ஒருவர் தெரிவு தெரிவு செய்யப்படுவதற்கு சிறிதரனும் ஆதரவு வழங்கியுள்ளார் என்று விடய மறிந்த வட்டாரங்கள் சுட்டுகின்றன.

ஏற்கனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீட்டு சபை உறுப்பினர்களாகவும், நாட்டின் கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கும் பரிந்துரைக்கப்பட்ட இராணுவ அதிகாரிகளுக்கு ஆதரவாக சிறிதரன் செயற்பட்டார் என்று குற்றம் சுமத்தப்படும் நிலையில், இப்போது அதே போன்ற இன்னொரு விடயம் வெளிப்பட்டிருக்கின்றது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தம் நிலையை சிறிதரன் இன்னும் தெளிவுபடுத்தாத பின்புலத்தில், மேற்படி அரசமைப்புக் கவுன்ஸிலின் கூட்டங்கள் பற்றிய அறிக்கையை பார்வையிட்ட ஒரு தரப்பு, பெரும்பாலும் எல்லாக் கூட்டங்களுக்கும் சிறிதரன் நேரடியாக அல்லது இணையவழியில் பிரசன்னமாகி இருந்தார் என்று பதிவுகள் உள்ளன எனவும், அதேசமயம் கூட்டத்தில் அவர் தெரிவித்த கருத்து என்று எதுவும் பதிவு செய்யப்படவில்லை என்றும் விளக்கி இருக்கின்றது.

இவ்விவகாரத்தில் சிறிதரனுக்கு எதிராக தமிழர் தேசிய அரசியலில் காட்டமான கருத்து நிலைப்பாடு வெளிப்பட்டு வரும் சூழலில், அரசமைப்பு கவுன்ஸிலின் தலைவர் என்ற ரீதியில் சபாநாயகருக்கு இரண்டு கடிதங்களை அண்மைக்காலத்தில் சிறிதரன் அனுப்பி வைத்திருக்கிறார் என அறிய வந்தது.

முதல் கடிதம் இத்தகைய நியமனங்களுக்கு இராணுவத்தினரை நியமிக்கும் நடவடிக்கையைத் தாம் எதிர்க்கின்றார் என்று கூறப்பட்டதாக அறியவந்தது.

அடுத்த கடிதம், கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு இராணுவ அதிகாரி ராஜசிங்கவை ஆதரித்த முடிவை தாம் விலக்கிக் கொண்டு விட்டார் என கூறுவதாக அமைந்தது எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த நியமன பரிந்துரைக்கு ஆதரவாக தான் வாக்களித்தமையை சிறிதரன் விலக்கிக் கொள்ள வேண்டும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்ட பின்னணியில், அதனை நிறைவு செய்யும் விதத்தில் இந்த இரண்டாவது கடிதம் அனுப்பப்பட்டிருக்கக் கூடும் என்று கருதப்படுகின்றது.

எது, என்னவென்றாலும், இந்த விடயங்கள் வெளியே வந்தமைக்காக அப்பாவி ஊடகவியலாளர்களான என் போன்றவர்களை வைவதை விடுத்து, இத்தகைய குற்றச்சாட்டுகளுக்கு காத்திரமான விளக்கம் ஒன்றை சிறிதரன் அளிப்பது பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

தொடர்ந்து மௌனம் பேணுவது நடந்தவற்றை ஒப்புக் கொள்வதாக அமைந்து விடும்.

# கடந்த வருடத்தில் 114 சூட்டுச் சம்பவங்கள் 60 பேர் உயிரிழப்பு; 57 பேர் காயமுற்றனர்!



நேற்று முன்தினத்துடன் முடிவுற்ற கடந்த வருடத்தில் 114 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின எனவும், அதில் 60 பேர் உயிரிழந்தமையுடன், 57 பேர் காயமடைந்தனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் புதனன்று இடம்பெற்ற இரண்டு துப்பாக்கிச் சூட்டு சம்பவங்களும் பாரிய குற்றக் கும்பல்களைச் சேர்ந்தவர்களால் நடத்தப்பட்டன எனவும் பொலிஸார் கூறினர்.

கொஹுவலை, போதியவத்தை பகுதியில் புதன் இரவு 10.30 மணியளவில் மேற்படி துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றதுடன் மோட்டார் சைக்கிளில் வந்த நபர் துப்பாக்கிச் சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றார் எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த 16 வயதுச் சிறுமி தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். துப்பாக்கிச் சூட்டை நடத்திய நபர் இலக்கைத் தவறவிட்டு சிறுமியைச் சுட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான விசாரணையில் இளம் பெண் வசிக்கும் வீட்டுக்கு அருகில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட ஒருவர் இருப்பதும் அவர் தற்போது சிறையில் தண்டனை அனுபவித்து வருவதும் தெரியவந்துள்ளது. அவர் குற்றக் கும்பல் குழுவொன்றின் உறுப்பினராவார்.

இதற்கிடையில் களுத்துறை நாகொடைபோதனா வைத்தியசாலையில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வந்த ஒரு கைதி புதன்கிழமை இனந்தெரியாத துப்பாக்கிதாரியால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

துப்பாக்கிச் சூட்டில் பலியானவர் திலீப் சதுரங்க எனப்படும் ரஜவத்த சத்துவா என அடையாளம் காணப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கொழும்பில் நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இரவு துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழந்ததுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரும் ஹோமாகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## தமிழினம் விடுதலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பிறந்துள்ள புத்தாண்டில் என்னுடைய பிரார்த்தனை என்னவெனில் தமிழினம் ஓர் இனமாக – விடுதலையை நோக்கி முழுமையாக – ஒன்றாகப் பயணிக்க வேண்டும். அதன் மூலம் எங்களுடைய இனம் விடுதலை பெற வேண்டும். சுயமாக சுயாட்சி பெற வேண்டும். தன்னாட்சி பெற வேண்டும். தமிழாட்சி பெற வேண்டும். அதுவே எனது பிரார்த்தனை." – என்றார்.

## இருபாலை தெற்கில் கமக்காரர்கள் பதிவு

இருபாலை தெற்கு கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் பதிவை மீளாய்வு செய்யும் பணிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை இருபாலைதெற்கு பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கமக்காரர்கள் அமைப்பின் அங்கத்தவர்கள் அனைவரும் தமது பதிவை உறுதி செய்யும் வண்ணம் செயலாளர் நடேசபிள்ளை கஜேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

## இரண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒருவர் தற்போது மாவனெல்ல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொண்டேனிய பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மனநிலை சரியில்லாதவர் என விசாரணையில் தெரியவந்தது.

சடலங்கள் மாவனெல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் மாவனெல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இராமர் பாலம் பற்றிய அறிவித்தல் பலகையில் இந்துக் கடவுளரின் படங்களை அனுமதியாதீர்!

## மன்னார் மறைக்கோட்ட முதல்வர் காட்டம்


புனித செபஸ்தியார் பேராலயம்
ST. SEBASTIAN'S CATHEDRAL




(ந.லோகதயாளன்)

மன்னாரில் சுற்றுலா அதிகார சபை நாட்டிய வழிகாட்டல் பலகையில் இந்து சமய அடையாளங்கள் காணப்படுவதனால் அதனை அகற்றுமாறு கிறிஸ்தவ குருமுதல்வர் எழுத்தில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

மாகாண சுற்றுலாவை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மாவட்ட ரீதியில் மாவட்டத்தின் முக்கிய இடங்களில் அடையாள விளம்பர பலகைகளை மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நாட்டி வருகின்றது.


இதன் தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகரின் நுழைவாயில் அருகே உள்ள மதகுப் பகுதியில் தலைமன்னார் – இராமேஸ்வரம் இடையே காணப்படும் இராமர் பாலம் தொடர்பிலான அறிவித்தல் பலகையும் கடந்த வாரம் நாட்டப்பட்டது.

இவ்வாறு நாட்டப்பட்ட அறிவித்தல்ப் பலகையில் இராமர், இலட்சுமணன் ஆகியோருடன் ஆஞ்சநேயர் போன்ற சமய கடவுள்களின் தோற்றங்களும் காணப்படுகின்றன. இந்து சமயத்தை மையமாகக் கொண்டதாக இவை காணப்படுகின்றமையால் அந்த அறிவித்தல் பலகையை அகற்றுமாறு மன்னார் ஆயர் இல்லம் அழுத்தம் கொடுத்து வருகின்றது.

அழுத்தம் பிரயோகிக்கப்பட்ட போதும் அறிவித்தல் பலகை அகற்றப்படாத காரணத்தால் மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தின் கடித தலைப்பில் மன்னார் நகரசபையின் தவிசாளருக்கு முகவரியிடப்பட்டு மறைக்கோட்ட முதல்வர் து.கிருஸ்துநாயகம் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

“மன்னார் நகரத்தின் நுழைவாயிலில் (பிரதான பாலத்தின் அருகாமையில்) சுற்றுலாத்துறை அமைச்சினால் இராமர் பாலம் தொடர்பான ஒரு பெயர்ப் பலகை நிறுவப்பட்டுள்ளது. இந்து சமயக் கடவுளர்களின் படங்களைத் தாங்கியதான இந்தப் பெயர்ப் பலகையானது மன்னாரில் மதநல்லிணக்கத்தைப் பாதிப்பதாகவும் மதங்களுக்கு இடையிலான ஒற்றுமையைச் சீர்குலைத்து முறுகல் நிலையை, குழப்பத்தை தோற்றுவிப்பதாகவும் அமைந்துள்ளது. இப்பெயர்ப் பலகை தொடர்பாக பொதுமக்கள் பலர் தமது அதிருப்தியை, எதிர்ப்பை நாளாந்தம் எமக்குத் தெரிவித்த வண்ணமே உள்ளனர். எனவே மன்னாரில் உள்ள அனைத்து மத மக்களின் நன்மை கருதி இப்பெயர்ப் பலகையை இவ்விடத்திலிருந்து நீக்குவதற்கு ஆவன செய்யுமாறு தங்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்” – என்று அந்தக் கடிதத்தில் மன்னார் மறைக்கோட்ட முதல்வர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக முன்னர் பதவி வகித்த அ.பத்திநாதன் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பதும் நேற்றைய தினத்துடன் அவர் பதவி நீக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கவெள.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தொடரும் டீல் அரசியல்!

தனது தேசிய மக்கள் சக்தி தலைமையிலான கொழும்பு மாநகர சபை நிர்வாகம் தன்னுடைய முதலாவது வரவு - செலவுத் திட்டத்தின் முதல் சமர்ப்பிப்பின்போது தோல்வி அடைந்தமையால், அந்த வரவு - செலவுத் திட்டத்தை அடுத்த சமர்ப்பணத்தில் வெற்றி பெறச் செய்வதற்காக நாட்டின் நிறைவேற்றதிகாரம் சின்னத்தனமான அரசியல் பண்ணியிருப்பதாக குற்றச்சாட்டுக்கள் இப்போது கிளம்பியுள்ளன.

ஒரு சில வாக்குகள் வித்தியாசத்தில் முதல் சமர்ப்பணத்தில் இந்த வரவு - செலவு திட்டம் தோற்கடிக்கப்பட்டது.

திரும்பவும் இந்த வரவு - செலவுத் திட்டம் சபையில் சமர்ப்பிக்கப்பட இருக்கையில், கடைசி நேரத்தில், இதற்கு முன்னர் 2010 முதல் 2025 வரையான காலகட்டத்தில் கொழும்பு மாநகர சபையில் நடந்தவை எனக் கூறப்படும் ஊழல், சொத்துக்களைத் துஷ்பிரயோகம் செய்தல், அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துதல் போன்றவற்றை விசாரிக்க புதிய ஆணைக் குழு ஒன்றை நியமித்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அறிவிப்பு விடுத்திருக்கிறார்.

முன்னைய நிர்வாகங்களில் இருந்த உறுப்பினர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்ட தரப்புகளை அச்சுறுத்தி, அடக்கி, தமக்குச் சாதகமாக செயல்படுத்துவதற்காகவே முதல் தடவை வரவு - செலவுத் திட்டம் தோற்கடிக்கப்பட்டு, இரண்டாவது தடவை அது சமர்ப்பிக்கப்படவிருக்கும் சமயத்தில் - கடைசி நேரத்தில் - இந்த ஆணைக்குழு நியமனம் என்ற அதிரடி நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

ஜனாதிபதி எடுத்த இந்த நடவடிக்கையால், அந்த வர்த்தமானிக்குப் பயந்து சிலர் வாக்களிப்பு சமயம் சமுகம் தரவில்லை. இதுதான் அந்த அச்சுறுத்தல் டீலின் விளைவா என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கேள்வி எழுப்பி இருக்கிறார்.

“ஜனாதிபதி தனது பலத்தை பயன்படுத்தி ஆணைக்குழுக்களை நியமித்தமை உறுப்பினர்களைப் பயமுறுத்தி வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கே. ஏன் இதற்கு முன்னர் நியமிக்கவில்லை? ஜனாதிபதி பதவியேற்று ஒரு வருடம் முடிந்துவிட்டது. ஏன் இவ்வளவு காலமும் செய்யவில்லை? முதலில் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரித்திருந்தால் இந்த ஆணைக்குழுவே வந்திருக்காது. இது தான் உண்மையாகும். அதனால் ஜனாதிபதி தனது பதவியை முறைகேடாக பயன்படுத்தியுள்ளார். இந்த வர்த்தமானிக்குப் பயந்தே சிலர் வரவில்லை. இதுதான் டீல் என்றோ தெரியவில்லை. இவர்கள் முறைமை மாற்றத்திற்கே வந்தார்கள். ஆனால் அதே டீல் அரசியல் தொடர்வதாகவே தோன்றுகிறது.” - என்று அவர் சுட்டுவதில் அர்த்தம் இருப்பதாகவே தோன்றுகின்றது.

தெற்கில் மாத்திரம் அல்லாமல், வடக்கு, கிழக்கிலும் உள்ளூராட்சி சபைகளை அடக்கிக் கட்டுப்படுத்துவதற்கு நிறைவேற்றதிகாரம் தன் கைவரிசையைப் பல்வேறு வகைகளில் பயன்படுத்தி வருவதாகக் குற்றச்சாட்டுக்கள் தொடர்ந்து எழுந்த வண்ணமே இருக்கின்றன.

கையிட்டி சட்டவிரோத விகாரை விடயத்தில், அது அமைந்துள்ள வலி. வடக்கு பிரதேச சபையை அடக்குவதற்கும் நிறைவேற்றதிகாரத்தின் அரூபக் கரங்கள் அதன் கைவரிசையைக் காட்டுகின்றன என செய்திகள் வெளியாகி உள்ளன.

இந்த வகையில் பார்த்தால் முன்னைய நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளின் தகிடுதத்தங்களில் இருந்து இந்த ஜனாதிபதியும் வேறுபட்டவர் அல்லர் என்றுதான் தோன்றுகின்றது.



# தையிட்டி விகாரை குறித்து சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் விளம்பரம் பிரசுரிக்கத் தீர்மானம்!

## வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் முடிவு

தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை தொடர்பாக தென்னிலங்கையில் பரப்பப்படும் தவறான தகவல்கள் தொடர்பாக சிங்கள மக்களுக்கு உண்மை நிலையை வெளிப்படுத்த சிங்கள பத்திரிகைகளில் சிங்கள மொழியில் விளம்பரங்களை பிரசுரிக்க வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தீர்மானிக்கப்பட்டது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே இந்த விடயம் முன்வைக்கப்பட்டது.

தையிட்டி விகாரை காணி வரைபடங்களை தெளிவாக பிரசுரித்து விளம்பரங்களைப் போட சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

தையிட்டி விகாரையை உடைக்கப் போவதாக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் தவறான தகவல்களை சிங்கள ஊடகங்களுக்கு வெளிப்படுத்துகின்றார் என சபை அமர்வில் குற்றஞ்சாட்டப்பட்டது.



# வலி வடக்கு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்கு தையிட்டி விவகாரத்தை ஒட்டி மன்று அழைப்பாணை

தையிட்டி விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக விகாரைக்கு அருகில் போராட்டத்தில் ஈடுபட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் 11 உறுப்பினர்களுக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தினால் அழைப்பு கட்டளை அனுப்பபட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் பலாலி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கின்படி நீதிமன்ற பதிவாளரால் அழைப்புக் கட்டளை அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி பிரதேச சபை உறுப்பினர்கள் 11 பேரையும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்புக் கட்டளை வழங்கப் பட்டது.

கடந்த டிசம்பர் 21 ஆம் திகதி தையிட்டி விகாரையின் முன்பாக விகாராதிபதியின் பதவி உயர்வுக்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அன்றையதினம் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு எதிராக வலிகாமம் வடக்கு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட 29 பேருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் தடைக் கட்டளை பிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தையிட்டி விகாரை சட்ட விரோதக் கட்டடம் என பெயர்ப் பலகை நாட்டினால் சட்ட நடவடிக்கை

## பிரதேச சபையை அச்சுறுத்துகின்றது பொலிஸ்




வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தீர்மானத்திற்கமைய தையிட்டி திஸ்ஸ ரஜமகா விகாரை முன்பாக சட்டவிரோதக் கட்டடம் எனப் பெயர் பலகை நாட்டினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதேச சபை செயலாளருக்கு பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியால் எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட தையிட்டி பகுதியில் தனியார் காணியில் அனுமதியின்றி அமைக்கப்பட்ட திஸ்ஸ விகாரையை சட்டவிரோதக் கட்டடம் என அடையாளப்படுத்தும் வகையில் பெயர் பலகையை மூன்று மொழிகளிலும் நாட்ட பிரதேச சபை அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியது.

இது தொடர்பிலேயே பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியால் வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளருக்கு எழுத்து மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அந்த கடிதத்தில் –

தையிட்டி விகாரைக்கு முன்பாக சட்டவிரோத கட்டடம் எனப் பெயர் பலகை நடப்படப் போவதாக புலனாய்வுப் பிரிவு மூலம் தகவல் கிடைத்துள்ளது.

அதன்படி இவ்வாறான அறிவித்தல் பலகை காட்சிப்படுத்துவதன் மூலம் பௌத்தம் மற்றும் இந்து சமயத்துக்கு இடையிலான நல்லிணைத்தில் முரண்நிலை தோன்றுவதுடன் சமாதான சீர்குலைவு ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளது. இவ்வாறான பெயர் பலகை வலிகாமம் வடக்கு பிரதேச சபையினாலோ வேறு அமைப்புகள் மூலமோ நிறுவனங்கள் மூலமோ காட்சிப்படுத்தும் நோக்கம் இருப்பின் அதை சட்டரீதியாக மேற்கொள்ளுமாறும், சட்ட ரீதியற்ற முறையில் அவ்வாறு அறிவித்தல் பலகையை நாட்ட நடவடிக்கை எடுத்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கின்றோம் – என்றுள்ளது.

இந்த விடயத்தை நேற்று வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் விசேட அமர்வில் பிரதேச சபை தவிசாளர் சோ.சுகிர்தன் வெளிப்படுத்தினார்.

அதன்படி, தனியார் காணிக்குள் சட்டவிரோதமாக கட்டப்பட்ட கட்டடம் என்ற வகையில் பிரதேச சபையின் சட்ட ஆலோசகரின் ஆலோசனைப்படி பெயர் பலகை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சபையில் தீர்மானிக்கப்பட்டது.

# பேரிடர் சமயங்களில் இந்தியாவே முதன் முதலில் கரம் கொடுத்தது!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

இலங்கையில் ஏற்பட்ட பல்வேறு இடர்களின் போது இந்தியாவே முதன் முதலில் கரம் கொடுத்துள்ளது. இலங்கையில் குறிப்பாக வடக்கு மக்களையும் காப்பாற்றுகின்ற தமது கடமையை அவர்கள் நிறைவேற்றி உள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள தமது அலுவலகத்தில் நேற்று வியாழன் மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் அண்மையில் இலங்கைக்கு விஜயம் ஒன்றை முன்னெடுத்திருந்தார். அவர் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கை தமிழரசு கட்சி மற்றும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகியோரையும் சந்தித்து கலந்துரையாடினார்.



அதன் அடிப்படையில் மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்ற எங்களுடைய கோரிக்கையை முன் வைத்தோம்.

எல்லை நிர்ணயங்களை மேற்கொள்ளும் சூழலை ஏற்படுத்தாமல் பழைய முறைப்படி இத்தேர்தலை நடத்தி முடிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் முன்வைத்துள்ளோம்.

பொருளாதார ரீதியில் இலங்கை வீழ்ச்சி அடைந்து போது இந்தியா தனது காலை பதித்து, உதவியது. இயற்கை அனர்த்தத்தின் போது மக்கள் தவித்த போது இந்தியாவே இங்கு முதன் முதலாகத் தனது காலை பதித்தது. இலங்கையில் – குறிப்பாக வடக்கில் – மக்களையும் காப்பாற்றுகின்ற தமது கடமையை அவர்கள் நிறைவேற்றி உள்ளனர்.

இலங்கைக்கு அன்மையிலுள்ள நாடு இந்தியாவே, அதைப் பற்றி பிடியுங்கள் என ஜனாதிபதியிடம் நாடாளுமன்றத்தில் வைத்துத் தெரிவித்திருந்தேன்.

நேசக்கரம் நீட்டி, சமாதானத்துடன் இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்ற ஒரு வாய்ப்பு வருகின்ற போதே நாம் இலங்கையை மீட்டெடுக்க முடியும் என்று நாங்கள் கூறி இருந்தோம்.

அதனையும் நாங்கள் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரிடம் நாம் கூறியிருந்தோம். இலங்கையில் ஏற்பட்ட இடர்களின் போது முதன் முதலில் இந்தியா இலங்கைக்கு உதவிகளை முன்னெடுத்த பின்னர் ஏனைய நாடுகள் தமது அறிவிப்புக்களை முன்னெடுத்தது உதவிகளையும் செய்துள்ளன. – என அவர் தெரிவித்தார்.

மேலும் சமகால நிலவரங்கள் குறித்து அவர் தனது கருத்துக்களை இந்தச் சந்திப்பின் போது தெரிவித்தார்.

# முள்ளியவளை வடக்கு நாவல்காடு வீதியின் சீரமைப்புப் பணிகள் நேற்றுத் தொடங்கின











**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று, பிரதேசசெயலர் பிரிவிற்குட்பட்ட முள்ளியவளை வடக்கு, நாவல்காடு வீதிச் சீரமைப்பின் தொடக்கநாள் நிகழ்வுகள் கரைதுறைப்பற்று பிரதேசசெயலகத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புத்தாண்டு முதல் தினத்தில் இடம்பெற்றன.

இந்த வீதியின் சீரமைப்புக் குறித்து வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தொடர் முயற்சிகளை மேற்கொண்டுவந்த நிலையில் இப்போது அப்பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் வெள்ள அனர்த்தம் ஏற்படும்போதும் இந்த வீதி மிக மோசமாகப் பாதிக்கப்படுகின்ற நிலைம காணப்பட்டு வந்துள்ளது.

ஒவ்வொருமுறையும் வெள்ள அனர்த்தம் ஏற்பட்ட பின்னர், அக்கிராம மக்கள் ஒன்று சேர்ந்து இந்த வீதியைத் தற்காலிகமாக சீரமைத்துப் பயன்படுத்தி வருகின்ற அவலநிலையே தொடர்ந்தும் இருந்து வந்துள்ளது.

இந்த வீதியைப் பெரும் எண்ணிக்கையான மாணவர்களும், விவசாயிகளும் பயன்படுத்தி வருகின்றனர். அத்தோடு கோயில், தேவாலயம் செல்லவும் இறுதி ஊர்வலம் என்பவற்றிற்கும் பொதுமக்கள் பயன்படுத்துகின்ற பிரதான வீதியாகவும் இந்த வீதி காணப்படுகின்றது.

இந்த வீதி சீரின்றிக் காணப்படுவதால் தாம் எதிர்நோக்கும் பாதிப்பு நிலைமைகள் தொடர்பில் அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரியப்படுத்தப்பட்டிருந்தது.

அவ்வாறு மக்களால் முறையீடுசெய்யப்பட்டதற்கமைய, கடந்த 16.01.2025 அன்று முள்ளியவளைப் பகுதிக்கு நேரடியாகச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் பாதிப்பு நிலமைகள் குறித்து ஆராய்ந்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து அந்த நாவல்காடு வீதி சீரமைப்பு தொடர்பில் கரைதுறைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் மற்றும் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க ஆகியோரின் கவனத்திற்கு ரவிகரன் கொண்டுவந்தமையுடன், வீதிச் சீரமைப்பிற்கான கோரிக்கை மகஜரும் அவரால் கையளிக்கப்பட்டிருந்தது.

இப்போது வீதியின் சீரமைப்பு பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், செல்லத்தம்பி திலகநாதன், கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், பிரதேசசபை உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



# மாநகர சபையின் 77 வருட நிறைவும் கடமை தொடக்க நாள் நிகழ்வுகளும்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 77 ஆம் ஆண்டு நிறைவு தினமும் 2026 ஆம் ஆண்டுக்கான கடமை நடவடிக்கைகள் ஆரம்பமும் நேற்று மாநகர சபை முன்றலில் முதல்வர் வி.மதிவதனி தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் முதல்வர் திருமதி வி.மதிவதனி பிரதம உரையை நிகழ்த்தியிருந்தார். அந்த உரையில், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார்.

2026 ஆம் ஆண்டின் தொடக்க நாளான இன்று முதல்வர், உறுப்பினர்கள் உள்ளடங்கிய சபை மற்றும் ஆணையாளர், நிர்வாகத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் இணைந்து எமது சபையின் ஊடாக முடியுமானதும், முழுமையானதுமான சேவைகளை மாநகர மக்களுக்கு வழங்குவோம் என உறுதிபூணுவோம்.

மாநகரசபை ஆரம்பிக்கப்பட்டு 77 வருடங்கள் பூர்த்தியாகின்ற இன்றைய நாளில் சபையின் பாரம்பரியத்தையும், நீண்ட வரலாற்றையும் கொண்ட எமது சபையின் உறுப்பினர்களாக, உத்தியோகத்தர்களாக இருப்பதை இட்டு ஒவ்வொருவரும் பெருமை கொள்வோம்.

எமது மாநகரசபையின் சேவைகளை இவ்வருட இறுதிக்குள் அதன் புதிய கட்டடத்தில் இயக்க மாநகரக மக்களுக்கு எல்லாம் வல்ல இறைவன் ஆசி வழங்க வேண்டும் எனவும் பிரார்த்திக்கின்றேன்.

மாநகரசபைக்காக சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருகை தரும் பொதுமக்கள் மனவேதனை அடையாத வகையில், அலைக்கழிக்கப்படுகின்றோமோ என்று எண்ணாத அளவுக்கு அவர்களின் தேவைகளை விரைந்து நிறைவு செய்து வழங்க அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொள்வோம் என பகிரங்க அழைப்பை விடுத்திருந்தார்.

நிகழ்வில் தேசிய வேலைத்திட்டமான கடமை உறுதிமொழி எடுக்கும் நிகழ்வு ஆணையாளர் கிருஸ்ணேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர பிரதி முதல்வர், உறுப்பினர்கள், ஆணையாளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.









# க.பொ.த. உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பகுதிக்கான திகதி அறிவிப்பு

2025 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் எஞ்சிய பகுதி எதிர்வரும் ஜனவரி 12 முதல் 20 ஆம் திகதி வரை நடைபெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விரிவான சுற்றுநிருபம் இன்று வெளியிடப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் நாலக்க கலுவெவ தெரிவித்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக 2025ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சைகள் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் குடும்பஸ்தர் கத்தியால் குத்திக் கொலை



வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

தவனேசன் (வயது 40) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் நேற்று பிற்பகல் 5 மணியளவில் மருதங்கேணி வீரபத்திரர் கோவிலை அண்மித்த பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொலை செய்யப்பட்டவர் மருதங்கேணி பகுதிக்கு சென்றுகொண்டிருக்கும்போது வழிமறித்து கத்திக் குத்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கத்தி குத்துக்கு இலக்கானவரை மருதங்கேணி மருத்துவமனைக்கு கொண்டு சென்ற போது அங்கு அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவரை மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# லாப்ஸ் எரிவாயு விலை அதிகரிப்பு

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் சமையல் எரிவாயு விலையை அதிகரித்துள்ளதாக லாப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை150 ரூபாவால் அதிகரிக்கப் பட்டுள்ளது.

இந்த விலை அதிகரிப்புக்கமைய, அதன் புதிய விலை 4,250 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக 12.5 கிலோ கிராம் நிறையுடைய லாப்ஸ் சமையல் எரிவாயுவின் விலை, சந்தையில் 4,100 ரூபாவாக காணப்பட்டது.

அவ்வாறே, 5 கிலோகிராம் லாப்ஸ் எரிவாயுவின் 65 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. அதன் புதிய விலை 1,710 ரூபாவாகும்.




# தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் பதவி விலகல்



தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள தரம் 6 ஆங்கிலப் பாடப் திட்டம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரை, தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் மஞ்சுளா விதானபத்திரன தனது பதவியிலிருந்து தற்காலிகமாக விலகவுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசாரணைகளை முன்னெடுக்கும் வகையில், பதவியிலிருந்து விலகியிருக்குமாறு பிரதமரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாகவே அவர் இந்ததீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தரம் 6 மாணவர்களுக்கான புதிய ஆங்கிலப் பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில விடயங்கள் சமூக மட்டத்தில் பெரும் விவாதங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது குறித்து முறையான விசாரணைகளை நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்த விசாரணைகள் நிறைவடையும் வரை அவர் தனது பணிகளிலிருந்து விலகியிருப்பார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சைபர் குற்றங்கள் அதிகரிப்பு; 12,000 பேர் மீது குற்றச்சாட்டு



இலங்கையில் டிஜிட்டல் தொழில்நுட்பப் பயன்பாடு அதிகரித்துள்ள நிலையில், கடந்த 2025 ஆம் ஆண்டில் மட்டும் 12,650 இற்கும் அதிகமான சைபர் குற்ற முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக இலங்கை கணினி அவசரகால பதிலளிப்பு குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் சமூக ஊடக மோசடிகளான போலி கணக்குகள், கணக்குகளை முடக்குதல் மற்றும் இணைய நிதி மோசடிகளே அதிகளவில் பதிவாகியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

தொழில்நுட்ப அறிவு குறைவாக உள்ள முதியவர்கள், சிறுவர்கள் மற்றும் புதிதாக இணையத்தைப் பயன்படுத்துபவர்களையே குற்றவாளிகள் அதிகம் குறிவைக்கின்றனர்.

இதன்மூலம், இணையவழி துன்புறுத்தல்கள், பாலியல் ரீதியான உள்ளடக்கங்கள் மற்றும் தவறான தகவல்கள் மூலம் தனிநபர்களின் நற்பெயருக்கும் மனநலத்திற்கும் பாதிப்பு ஏற்படுத்தப்படுகின்றது.

இந்த நிலையில், பொதுமக்கள் தமது டிஜிட்டல் பாதுகாப்பை உறுதிப்படுத்த பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது

01. வலுவான கடவுச்சொற்களைப் (Passwords) பயன்படுத்துதல்.

02. கணக்குகளுக்கு Two-factor authentication முறையைச் செயற்படுத்துதல்.

03. அறிமுகமில்லாத இணைப்புகளை (Links) அழுத்துவதைத் தவிர்த்தல்.

மேலும், சைபர் குற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகளை மேற்கொள்ள அல்லது ஆலோசனைகளைப் பெற SLCERT நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# தேங்காய் விலையில் புத்தாண்டில் அதிகரிப்பு

நாட்டில் தேங்காய் உற்பத்தி அதிகரித்துள்ள போதிலும், வெளிச்சந்தையில் தேங்காய் விலை சடுதியாக உயர்ந்துள்ளமையைக் கட்டுப்படுத்துவதற்கு தென்னை பயிர்ச்செய்கை சபை நேரடித் தலையீட்டை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் நடைபெற்ற தேங்காய் ஏலத்தில் ஒரு தேங்காய் 122 - 124 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது. இருப்பினும், வெளிச்சந்தையில் அதே தேங்காய் 180 - 200 ரூபாய் வரையிலான அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் பணிப்பாளர் சுனிமல் ஜயகொடி கவலை வெளியிட்டுள்ளார்.

ஏலத்தில் குறைந்த விலைக்கு தேங்காய்களை வாங்கி, நுகர்வோருக்கு அதிக விலைக்கு விற்பனை செய்யும் இடைத்தரகர்களே இந்த விலையேற்றத்திற்குக் காரணம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடைத்தரகர்களின் சுரண்டலிலிருந்து நுகர்வோரைப் பாதுகாக்கும் நோக்கில், இந்த ஆண்டு முதல், மாவட்ட ரீதியாக நேரடியாக தேங்காய்களை விற்பனை செய்ய சபை திட்டமிட்டுள்ளது.

இதன்படி, சபையினால் நிர்வகிக்கப்படும் 11 தென்னந்தோட்டங்களில் இருந்து பெறப்படும் தேங்காய்கள் எவ்வித இடைத்தரகர்களுமின்றி நேரடியாக நுகர்வோருக்கு வழங்கப்படவுள்ளன.

முன்னர் கொழும்பு, களுத்துறை, பத்தரமுல்ல மற்றும் மஹரகம போன்ற பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட நடமாடும் விற்பனைச் சேவை போன்று, இம்முறையும் சகல மாவட்டங்களிலும் நியாயமான விலையில் தேங்காய்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு நாட்டில் 2,900 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், இந்த ஆண்டு அந்த எண்ணிக்கை 3,000 மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், பூச்சிகள் மற்றும் ஏனைய விலங்குகளினால் ஏற்படும் சுமார் 10 சதவீத அறுவடை இழப்பைத் தடுப்பதற்கான விசேட பாதுகாப்புத் திட்டங்களும் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக சுனிமல் ஜயகொடி மேலும் தெரிவித்துள்ளார்.

# இலாபமற்ற 40 கிராமிய வீதிகளில் இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பம்



பொருளாதார ரீதியாக இலாபமற்ற கிராமிய வீதிகளில் பஸ் சேவைகளை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

போக்குவரத்து சிரமங்களை எதிர்நோக்கும் பொதுமக்களின் வசதிக்காக, இந்த சேவை முன்னெடுக்கப்படுவதுடன், வரவு - செலவு திட்ட முன்மொழிவின் கீழ் இதற்காக 2000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சிசு செரிய, கெமி செரிய மற்றும் நிசி செரிய ஆகிய திட்டங்களுக்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்ட 3300 மில்லியன் ரூபாவுக்கு மேலதிகமாக இந்த நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, இதுவரை பஸ் சேவைகள் இல்லாத 40 இலாபமற்ற கிராமிய வீதிகளில் நேற்று முதல் இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என தெரிவிக்கப்பட்டுள்ளது.




# இலங்கை வீடமைப்புத் திட்டங்களுக்கு இரட்டிப்பு நிதியுதவி வழங்கும் இந்தியா

இலங்கையில், முன்னெடுக்கப்பட்டு வரும் மூன்று முக்கிய வீடமைப்புத் திட்டங்களுக்கான நிதி உதவியை இரட்டிப்பாக்குவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான இராஜதந்திர கடிதங்கள் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

உயர்மட்ட தாக்கத்தை ஏற்படுத்தும் சமூக அபிவிருத்தித் திட்டங்களின் கீழ், கிராம சக்தி வடக்கு, கிராம சக்தி தெற்கு ஐ மற்றும் கிராம சக்தி தெற்கு II ஆகிய மூன்று திட்டங்களுக்கான ஒப்பந்தம் 2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் கைசாத்திடப்பட்டன.

இதன்படி, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் தாமாகவே வீடுகளைக் கட்டும் முறைமையின் கீழ் தலா 5 லட்சம் இலங்கை ரூபா நிதி வழங்கப்பட்டு வந்தது.

எனினும், கொரோனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக, 2022 ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், ஒதுக்கப்பட்ட நிதி ஊடாக வீடுகளை முழுமையாகக் கட்டிமுடிக்க பயனாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இதனை கருத்திற்கொண்டு, இலங்கை அரசாங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய, ஒரு வீட்டுக்கான நிதியுதவியை 10 லட்சம் ரூபாவாக அதிகரிக்க இந்தியா இணைக்கம் தெரிவித்தது.

இந்த நிதி அதிகரிப்பை அமுல்படுத்துவதற்கான கடிதங்களை இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் வீடமைப்பு, கட்டுமானம், நீர் வழங்கல் அமைச்சின் செயலாளர் குமுது லால் போகாவத்த ஆகியோர் பரிமாறிக் கொண்டனர்.

அதிகரிக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் ஆயிரத்து 550 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் நேரடியாகப் பயனடையவுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.











# பெரும்போக நெல் கொள்வனவுக்காக விசேட சலுகைக்கடன் வழங்கும் திட்டம்

சிறு மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகை வட்டியிலான கடன் வழங்கும் திட்டமொன்று நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போதைய பெரும்போக பருவத்தில் நெல் கொள்வனவு நடவடிக்கைகளை இலகுபடுத்தும் நோக்கில் இந்த கடன் சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ், தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் ஆண்டுக்கு 7 சதவீத சலுகை வட்டி விகிதத்தில் அதிகபட்சமாக 50 மில்லியன் ரூபா வரை கடனாகப் பெற்றுக்கொள்ள முடியும் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறாகப் பெறப்படும் கடன் தொகையை 180 நாட்களுக்குள் மீளச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது.

# அனர்த்த நிலைமை காரணமாக பாடசாலை நேரம் நீடிக்கப்படாது

## கல்வி அமைச்சு அறிவிப்பு



நாட்டில் நிலவும் அனர்த்த நிலைமை மற்றும் போக்குவரத்துச் சிக்கல்களைக் கருத்திற்கொண்டு, 2026 ஆம் ஆண்டில் பாடசாலை நேரம் நீடிக்கப்படாது என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான பாடசாலை கல்வி நடவடிக்கைகள் தொடர்பாக, கல்வி அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள கல்வி அமைச்சின் விசேட அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள அரசு மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளின் முதலாம் தவணைக்கான கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தரம் 5 - 13 வரையான மாணவர்களுக்கு காலை 7.30 முதல் பிற்பகல் 1.30 வரை வழமையான நேர அட்டவனை தொடரும்.

தரம் 6 முதல் 13 வரை நாளொன்றுக்கு 7 பாடவேளைகள் இடம்பெறும் என்பதுடன், ஒரு பாடவேளைக்கு 45 நிமிடங்கள் ஒதுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, 2026 இல் தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்குக் கல்வி மறுசீரமைப்புச் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்படும் எனவும், தரம் 6ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ கல்வி நடவடிக்கைகள் ஜனவரி 21 ஆம் திகதி ஆரம்பமாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தரம் ஒன்றுக்கான மாணவர்களை உள்வாங்கல் செயற்பாடுகள் ஜனவரி 5ஆம் திகதி ஆரம்பமாவதுடன், உத்தியோகபூர்வ கற்பித்தல் நடவடிக்கைகள் ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமாகும்.

அத்தோடு தரம் 1 மற்றும் 6 மாணவர்களுக்கான புதிய பாடத் புத்தகங்கள் கற்றல் நடவடிக்கைகள் ஆரம்பமாவதற்கு முன்னர் வழங்கப்படும் என்றும், ஏனைய தரங்களுக்கான புத்தகங்கள் ஏற்கனவே வழங்கி முடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் வருடத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது

(மரியசீலன் திலைக்ஸ்)

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு புனித கப்பலேந்தி மாதா ஆலயத்தில் வருடத் திருப்பலி நேற்று ஒப்புக் கொடுக்கப்பட்டது

நேற்று அதிகாலை 05.00 மணியளவில் திருச் செபமாலை யுடன் வருடத் திரும்பலி ஆரம்பமாகி ஒப்புக் கொடுக்கப்பட்டது

நேற்றைய வருடத் திருப்பலியை இந்தியாவின் திருச்சியையும் கப்புச்சியன் துறவற சபையையும் சேர்ந்த அருட்தந்தை சூசை மாணிக்கம் ஒப்புக் கொடுத்தார்.

அதிகளவான பக்தர்கள் கலந்து கொண்டு திருப்பலியை சிறப் பித்ததுடன், திருப்பலியின் இறுதியில் கடற்பகுதி அருட்தந்தையால் ஆசிர்வதிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.







# பொங்கலுக்கு பின் கூட்டணி குறித்து உறுதியான தகவல் வெளியாகும்

## நயினார் நாகேந்திரன் தெரிவிப்பு



தமிழகத்தில் பொங்கலுக்கு பின் கூட்டணியின் நிலை குறித்த உறுதியான தகவல்கள் வெளியாகும் என்று பா.ஜ.க. மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி அருகே கங்கை கொண்டான் வடகரை பகுதியில் பேச்சி ஓடையின் குறுக்கே நபார்டு நிதி உதவியுடன் 6 கோடி இந்திய ரூபாயில் அமையவுள்ள பாலத்துக்கு அடிக்கல் நாட்டிய அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“தமிழகத்தில் தினமும் கொலை, கொள்ளை உள்ளிட்ட சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன. போதைப் பொருள்கள் புழக்கம் கிராமங்கள் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகரித்து விட்டது. கையில் புத்தகம் ஏந்தி கல்வி நிலையங்களுக்கு செல்லும் வயதில் அரிவாள் தூக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனை அறிந்து கொள்ளும் வகையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு நான் கடிதம் எழுதினேன்.

இதன் மூலம் சட்டப்பிரிவு 356- ஐ பயன்படுத்த போவதில்லை . மாறாக தமிழக மக்களே சட்டப்பிரிவு 356-ஐ பயன்படுத்த தயார் நிலையில் உள்ளனர். அதாவது மக்கள் மனதில்ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கான எண்ணத்தை தி.மு.க. ஆட்சியாளர்கள் ஏற்படுத்தி விட்டனர். நிச்சயமாக வரும் சட்டப்பேரவை தேர்தலுக்குப்பின் ஆட்சி மாற்றம் ஏற்படும். தேர்தலுக்கு இன்னும் 90 நாள்களுக்கும் அதிகமாக உள்ளன. பொங்கலுக்குப் பிறகு கூட்டணியின் நிலை குறித்து உறுதியான தகவல்கள் அறிவிக்கப்படும்.

எதிர்வரும் 4 ஆம் திகதி உள்துறை அமைச்சர் அமித் ஷா திருச்சி வருகிறார். புதுக்கோட்டையில் நடைபெறும் ‘தமிழகம் தலைநிமிர தமிழன்’ பயணத்தில் பங்கேற்க இருக்கிறார். மறுநாள் 5 ஆம் திகதி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்கு சென்று வழிபாடு நடத்துகிறார். அன்றே டில்லி திரும்புகிறார்.

தற்போதைய நிலையில் தமிழகத்துக்கு பிரதமர் வருகை இல்லை. பழனிசாமியுடன் ஓ.பன்னீர்செல்வம் இணைய வேண்டும். இணைவார்கள் என பல்வேறு தகவல்கள் வெளியாகி வருகிறது. ஆனால் அது குறித்து எனக்குத் தெரியவில்லை. அது அ.தி.மு.க. விவகாரம். ஆனால் இருவரும் இணைய வேண்டும் என்பதுதான் எனது விருப்பம்.

பொங்கல் பரிசுத்தொகுப்பில் பணம் வழங்குவது குறித்த அறிவிப்பு வெளியிடப்படவில்லை. கடந்த ஆண்டு தமிழக அரசு பணம் எதுவும் கொடுக்கவில்லை. இந்த ஆண்டு நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் நிலையில் தனியாரிடம் கடன் வாங்கியாவது கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் உள்ளனர். தமிழகத்தின் அனைத்து திட்டங்களுக்கும் மத்திய அரசு 60 சதவீத நிதியை கொடுக்கிறது. மீதி உள்ள 40 சதவீதம் மட்டுமே மாநில அரசால் வழங்கப்படுகிறது. தமிழகத்தில் நிதி நிர்வாகமும் சரியில்லை நீதி நிர்வாகமும் சரியில்லை.

தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாத சிலர் பொங்கல் வாழ்த்துக்களை தெரிவிப்பார்கள். அவர்கள் தமிழர் திருநாள் என கூறி தப்பித்துக் கொள்வார்கள். தீபாவளிக்கு வாழ்த்து சொல்லாமல் கிறிஸ்துமஸ் வாழ்த்துகள் மட்டும் தெரிவிக்கும் அவர்கள் போலி மதச்சார்பின்மையை கடைப்பிடிக்கின்றனர்.

கரூரில் 41 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து தீபாவளி கொண்டாட வேண்டாம் என தனது கட்சியினருக்கும் ரசிகர்களுக்கும் விஜய் உத்தரவிட்டிருந்தார். ஆனால் தற்போது நத்தார் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது போன்ற சம்பவங்களால் அவரும் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக செயல்படுகிறாரோ என எண்ணத் தோன்றுகிறது.” என்று தெரிவித்துள்ளார்.

# த.வெ.க. நிர்வாகிகள் நியமனத்தில் அதிருப்தி: செங்கோட்டையனை முற்றுகையிட்ட கட்சியினர்



தமிழகம் முழுவதும் த.வெ.க. நிர்வாகிகள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். சில நாள்களுக்கு முன்பு தூத்துக்குடி மாவட்டச் செயலாளர் பதவி கிடைக்காத விரக்தியில் நிர்வாகி அஜிதா விஜய் காரை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தியதுடன், தற்கொலைக்கும் முயன்றார்.

இந்நிலையில், திருப்பூர் மாவட்டம் வெள்ளகோவிலில் த.வெ.க. அலுவலகம் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. கட்சியின் நிர்வாகக் குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் அலுவலகத்தை திறந்துவைக்க வந்த போது, கட்சியினர் சிலர் அவரை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வெள்ளகோவில் பகுதிக்கு ஈரோடு, தாராபுரத்தைச் சேர்ந்தவர்களை நிர்வாகிகளாக நியமித்ததாகவும், கட்சி மற்றும் விஜய் மக்கள் இயக்கத்தில் பல ஆண்டுகளாகப் பணியாற்றியவர்களுக்கு, பதவி வழங்கக் கோரியும் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

செங்கோட்டையன் காரை செல்ல விடாமல் தடுத்த கட்சியினர், அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனால் அதிர்ச்சியடைந்த செங்கோட்டையன் “அனைவரும் கோபிசெட்டிபாளையத்தில் உள்ள அலுவலகத்துக்கு வாருங்கள். அங்கு பேசி, பிரச்சினைக்குத் தீர்வு காண்போம்” என்று கூறிவிட்டு, அங்கிருந்து சென்றார்.

இந்நிலையில், செங்கோட்டையனை த.வெ.க. நிர்வாகிகள் முற்றுகையிடும் காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.







# சுவிட்சர்லாந்தில் தீப்பரவல்: பலி எண்ணிக்கை அதிகரிப்பு

சுவிட்சர்லாந்தின் கிரான்ஸ்-மொன்டானா பனிச்சறுக்கு சுற்றுலாத் தளத்தில் உள்ள உணவகத்துடன் இணைந்து மதுபான விடுதியில் ஏற்பட்ட பாரிய தீப்பரவலில் பலர் உயிரிழந்திருக்கக்கூடும் என அந்த நாட்டு அதிகாரிகள் உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளனர்.

நேற்று பிற்பகல் நடைபெற்ற அவசர செய்தியாளர் சந்திப்பில் வாலிஸ் மாகாண அதிகாரிகள் விபத்து இந்த மேலதிக விபரங்களை வெளியிட்டனர்.

அதன்படி, உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 40 ஐத் தாண்டக்கூடும் என அஞ்சப்படுகிறது.

காயமடைந்த 100 இற்கும் மேற்பட்டவர்களில் பெரும்பாலானோருக்கு மிகக் கடுமையான தீக்காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

சடலங்களை அடையாளம் காணும் பணிகள் தற்பொழுது தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. காயமடைந்தவர்கள் பல்வேறு மாகாணங்களுக்குச் சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளனர்.

வாலிஸ் மாகாண மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவு நோயாளிகளால் நிரம்பியுள்ள நிலையில், தீக்காயங்களுக்கு விசேட சிகிச்சை அளிக்கும் பிற மருத்துவமனைகளுக்கு கெலிக்ஹொப்டர்கள் மூலம் காயமடைந்தோர் கொண்டு செல்லப்படுகின்றனர்.

சம்பவ இடத்திற்கு 10 கெலிக்ஹொப்டர்கள், 40 நோயாளர் காவு வண்டிகள் மற்றும் 150 க்கும் மேற்பட்ட மீட்புப் பணியாளர்கள் விரைந்துள்ளனர்.

விபத்து நடந்த பகுதியில் அவசர கால மீட்புப் பணிகள் இன்னும் சில நாள்களுக்குத் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விபத்து குறித்து கருத்துத் தெரிவித்த அரச தரப்பு சட்டத்தரணி, இது எந்தவொரு திட்டமிட்டத் தாக்குதலும் அல்ல என்பதை உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், தீ விபத்துக்கான காரணம் குறித்துத் தொடர்ந்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அவசர தேவையின்றி எவரும் மருத்துவமனைகளுக்கு வர வேண்டாம் எனவும், தற்போது நிலவும் நெருக்கடியான சூழலைக் கருத்திற்கொண்டு பொது மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறும் அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

எவ்வாறாயினும், வெடிப்பொன்று ஏற்பட்டதையடுத்தே இந்த தீப்பரவல் ஏற்பட்டிருக்கலாம் என முன்னதாக பொலிஸார் தெரிவித்திருந்தனர்.








# ரஷ்யாவின் புத்தாண்டு கொண்டாட்டத்தில் உக்ரைன் ஆளில்லா விமான தாக்குதல்

## 24 பேர் உயிரிழப்பு

புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வுகளை இலக்கு வைத்து, உக்ரைன் நேற்று ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளதாக ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

இந்த தாக்குதலில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 50 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர் என ரஷ்யா கூறுகிறது.

ரஷ்யாவின் கெர்சான் பிராந்தியத்தில் உள்ள விடுதியொன்றில் நேற்று புத்தாண்டை முன்னிட்டு பெருமளவிலான மக்கள் கூடியிருந்தனர்.

இந்த நிலையில், அவர்களை இலக்கு வைத்து உக்ரைன் ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தியுள்ளன என ரஷ்யா குற்றம் சுமத்தியுள்ளது.

அத்துடன் இந்த தாக்குதலின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் தமது அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர் என ரஷ்யா குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே உக்ரைன் அனுப்பிய 168 ஆளில்லா விமானங்களை, தாம் தாக்கி அழித்ததாகவும் ரஷ்யா அறிவித்துள்ளது.







# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2025




இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படு வீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவன முடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும்.




இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப் படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று அதிக கவலையுடன் காணப் படுவீர்கள். உற்சாகமாக இருக்க முய லுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுப விக்க இயலும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவை யற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள். இன்று இருமல் பிரச்சினையால் அவதிப்பட நேரலாம்.




இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக் கும். இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப் புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந் துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடின மான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்க ளிடம் இருக்கும் மன உறுதி காரணமாக நல்ல ஆரோக்கி யத்தை பராமரிப்பீர்கள்.




தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற் சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத் தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ள தால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்பு களை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணி யில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படு வதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.

அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.




உங்கள் தினசரி செயல்களை மேற் கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதட்டமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப் பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய் வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்க ளுக்கு கவலை அளிக்கும். உங்களை அதிகம் வருத்திக் கொள்ளாதிருக்க முயலுங்கள்.




எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற் கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்திற்கு செலவு செய்வீர்கள். இன்று கணிசமான தொகை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

# இன்றைய ராசி பலன்கள் - 02.01.2025




சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்பிற்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.




உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் மிகவும் சிறப்பாக இருக்கும்.




இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மை யை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.




இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

# சட்ட விரோத மீன்பிடிக்குப் பயன்படுத்தப்படும் 115 வெடிபொருட்களுடன் சந்தேக நபர் கைது





(கற்பிட்டி நிருபர் சியாஜ்)

மன்னார் பொலிஸ் சிறப்பு அதிரடி படையுடன் இணைந்து, இலங்கை கடற்படை, மன்னார் பள்ளிமுனை பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒரு விசேட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போது வெடிப்பொருப்களைப் பயன்படுத்தி சட்டவிரோதமாக மீன் பிடித்ததற்காக, வோட்டர் ஜெல் எனப்படும் நூற்று பதினைந்து வணிக வெடி பொருள்களுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

வடமத்திய கடற்படை கட்டளையின் இலங்கை கடற்படை கப்பல்கள் கஜபா மற்றும் புஸ்சதேவ நிறுவனங்கள், மன்னார் பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினருடன் இணைந்து நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, மன்னார் பள்ளிமுனை பிரதேசத்தில் சந்தேகத்திற்கிடமான ஒரு வீடு சோதனையிடப்பட்டது. அங்கு, சட்ட விரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்காக வைத்திருந்த நூற்று பதினைந்து வோட்டர் ஜெல் வணிக வெடிபொருள்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மன்னார், பள்ளிமுனையைச் சேர்ந்த 45 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். சந்தேக நபர் வாட்டர் ஜெல் எனப்படும் நூற்று பதினைந்து வணிக வெடிபொருள்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.